# சனத்தொகை வளர்ச்சியும் அதற்கான காரணிகளும்: காத்தான்குடி பிரதேச செயலக பிரிவினை மையப்படுத்திய சமூகவியல் ஆய்வு

A. Ramees[1] &. J.F Nazeera[2]

[1] Department of Sociology,
[2] Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.
arameez@seu.ac.lk & nazeera19941118@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மக்கள் தொகை வளர்ச்சி மற்றும் அடர்த்தி ஆகியவை உலகின் பல நாடுகளின் பொதுவானதொன்றாகும். பிரதேச செயலகம்- காத்தான்குடி, நகர சபை – காத்தான்குடியின் அறிக்கைகளில் இருந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள காத்தான்குடி பிரதேச செயலக பிரிவில் 1988ம் ஆண்டு முதல் மக்கள் தொகை வளர்ச்சி, அடர்த்தியானது பிரதேச மக்களிடையே மிகத்துரிதமாக வளர்ச்சியடைந்துள்ளமையினை எடுத்துக்காட்டுகின்றது. இந்த விவகாரங்களை எதிர்கொள்ள அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் இது கடினமானதொன்றாக கொள்ளப்படுகின்றது. இந்த அடிப்படையில் சனத்தொகை வளர்ச்சி, மக்கள் தொகை அடர்த்தி போன்றவற்றிற்கான காரணிகளை ஆராய்வதை நோக்காக கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது. எண்ணியல் மற்றும் தரவு சார் எனும் இரு முறைகள் கொண்ட ஆய்வாக காணப்படுவதோடு தரவு சேகரிப்பு நோக்கங்களுக்காக 90 வினாக்கொத்துக்கள், 10 நேர்காணல்கள் மற்றும் 02 இலக்கக் குழு கலந்துரையாடல்கள் என்பன பயன்படுத்தப்பட்டுள்ளன. வசிப்பதற்கு போதிய இடவசதி போதாமை, பிராந்திய இணைப்பு, கிராமிய – நகர முன்னேற்றங்கள், ஆரம்ப வயது திருமணம் மற்றும் புதிய குடியேற்றங்கள் போன்றவற்றை மக்கள் தொகை வளர்ச்சிக்கான பிரதான காரணங்களாக ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன. ஆய்வின் முடிவில் மக்கள் வளர்ச்சி ஏற்படுவதற்கான காரணிகளை கொண்டு அவற்றிற்கான பொருத்தமான தீர்வு முறைகளை அறிவுறுத்துவதாக இவ்வாய்வு அமையப்பெற்றுள்ளது.

**திறவுச் சொற்கள் :** சனத்தொகை அடர்த்தி, பிரதேசப் பற்று, புதிய குடியேற்றம், இடவசதியின்மை

## அறிமுகம்

உலக சனத்தைாகை வளர்ச்சியானது நீண்டகாலமாக மந்தகரமான போக்கு காணப்பட்ட பின்பு குறுகிய காலத்தில் துரித வளர்ச்சியுடன் புதியதொரு பாதையில் புகுந்துள்ளது என கூறலாம். U.S. Census Bureau (2006) குறிப்பிடுகையில், 1960ம் ஆண்டு உலக சனத்தைாகை 3 பில்லியனாக இருந்து 2007ம் ஆண்டு ஏறக்குறைய 7 பில்லியனாக அதிகரித்துள்ளதாகவும் 2050ம் ஆண்டில் 9 பில்லியனாக வளர்ச்சியடையும் என எதிர்வு கூறப்படுகின்றது. வருடத்திற்கு 7,77,60 000 , மாதத்திற்கு 4,4,80,000 , நாளொன்றிற்கு 216 000 , மணித்தியாலத்திற்கு 9000 ,நிமிடத்திற்கு 150 என்ற வீதத்தில் சனத்தொகை வளர்ச்சி ஏற்படுகின்றது (www.geography.about.com ).

பல்வேறு ஏதுக்களினால் உலகில் எந்த ஒரு பிரதேசத்திலும் ஒரே விதமான சனத்தொகை வளர்ச்சியினை காண முடியாது. அது கண்டத்திற்கு கண்டம் மாறுபடும். U.N Population Division 2015ம் ஆண்டினது அறிக்கை வெளியீட்டின்படி, 1990ம் ஆண்டில் ஆபிரிக்க கண்டத்தின் மொத்த சனத்தொகை 4.5% காணப்பட்டது என்றும் 2000ம் ஆண்டில் 10% வளர்ச்சியடைந்துள்ளது எனவும் தெரிவித்துள்ளது. 2011ம் ஆண்டு List of country by population கணக்கெடுப்பின் படி, உலகில் உள்ள கண்டங்களின் தர வரிசையில் ஆசியாக்

கண்டம் 60.6 %, ஆபிரிக்கா கண்டம் 14.4% , ஐரோப்பியக் கண்டம் 10.7% , வட அமெரிக்கா 5.7% , தென் அமெரிக்கா 5.0% என்று வகைப்படுத்தப்படுகின்றது.

மக்கள் அடர்த்தி எனப்படுவது, குறிப்பிட்ட நில அலகொன்றில் வாழ்கின்ற மக்களின் தொகை அல்லது எண்ணிக்கையாகும். இது பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டுக் காணப்படும். மேலும் குறிப்பிடுகையில் 1 sq.$Km^2$ பரப்பளவில் எத்தனை மக்கள் உள்ளனர் என கணிப்பிட்டதன் பிற்பாடு குறிப்பிட்ட நிலப்பரப்பில் அதை விட அதிகமாக மக்கள் தொகை காணப்படின் அதுவே அதிக சனத்தொகை அடர்த்தி எனவும் கணிக்கப்படுகின்றது (தரம் 09- புவியியல் புத்தகம், கல்வி வெளியீட்டு திணைக்களம்).

இலங்கையை பொறுத்தமட்டில் 65 610 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் 2 272 464 மக்கள் தொகையினர் வாழ்கின்றனர் (புள்ளி விபரவியல் திணைக்களம்- 2012). இதற்கு முதல் 1981ம் ஆண்டு சனத்தொகை மதிப்பீட்டிலிருந்து இன்று வரை 36 சதவீதம் மக்கள் தொகை அதாவது 5 424 714 மக்கள் அதிகரித்துள்ளதாக 2012ம் ஆண்டினது சனத்தொகை கணக்கெடுப்பின் அறிக்கை தெரிவிக்கின்றது. 2014 தொகை மதிப்பீட்டு புள்ளி விபர அறிக்கையின் படி, 1 சதுர கிலோமீற்றர் பரப்பளவிற்கு 323 சனத் தொகை அடர்த்தி காணப்படுவதாகவும், 0.9% என்ற இவ்வளர்ச்சி வீதத்தினையும் கொண்டதாகவும் இலங்கை காணப்படுகின்றது.

18 கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட காத்தான்குடி பிரதேசமானது 2012 சனத்தொகை புள்ளிவிபரவியல் கணக்கெடுப்பின் படி, 47 603 சனத்தொகையினர் 6.00 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் வாழ்ந்து வருகின்றனர். மேலும் காத்தான்குடி பிரதேச சபை 2014 ஆண்டு கணக்கெடுப்பின் படி, ஆண்கள் 23 967 பெண்கள் 24 907 என்ற விகித அடிப்படையில் 48 874 மக்கள் தொகையினர் வாழ்கின்றனர் என தெரிவிக்கின்றது (Resource Profile, planning Division , Kattankudy DS. division – 2018). பொதுவாக இலங்கை சனத்தொகை அடர்த்தியானது 1 sq. $km^2$ – 323 மக்கள் அடர்த்தியே காணப்படுகின்றது ( Department of Census and statistics- 2017).

Planning Divisional Secretary Office – Kattankudy 2015 அறிக்கையின் படி, 1 சதுர km பரப்பளவிற்கு 6726/$km^2$ என்ற அடிப்படையில் காத்தான்குடியின் சனத்தொகை காணப்படுகின்றது என தெரிவிக்கின்றது. ஆனால் காத்தான்குடியை பொறுத்தமட்டில் 6403 மக்கள் தொகை 1 sq.$km^2$ பரப்பளவிற்கு இலங்கையின் சனத்தொகை அடர்த்தியின் எல்லையை விட அதிகமாக காணப்படுகின்றமை சவாலான விடயமாகும். எனவேதான் அதிகரித்து வரும் சனத்தொகை அடர்த்தியை கவனத்திற் கொண்டு முன்னெடுக்கப்பட்ட இவ்வாய்வானது சனத்தொகை அடர்த்தி ஏற்படுவதற்கான காரணங்களையும் கண்டறியும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### *ஆய்வுப் பிரச்சினை*

தென்கிழக்காசிய நாடுகளிலேயே அதிக சன அடர்தியும் தனியான முஸ்லிம் மக்களும் வாழுகின்ற பிரதேசமாக காத்தான்குடியை அடையாளம் கண்டிருப்பினும் இந்நெரிசலான வாழ்வானது சமூகக்கட்டமைப்பில் பல மாற்றங்களை கடந்த காலத்தை விட தற்பொழுது ஏற்படுத்தியுள்ளன. பொதுவாக இலங்கையில் முஸ்லிம்கள் அனைத்து மாவட்டங்களிலும் வாழ்கின்றனர். இருப்பினும் இப்பிரதேசத்தில் மாத்திரம் சனத்தொகை அதிகரிப்பானது பெருகிக் கொண்டே செல்கின்றது. இச்சனத்தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்த இலங்கை அரசு மற்றும் தனியார் நிறுவனங்களினால் பல்வேறு உத்திகளும் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்ட போதிலும் காத்தான்குடியில் சனத்தொகை ஏன் அதிகரித்து செல்கின்றது என்பதை கண்டறிவதே இவ்வாய்வின் பிரச்சினையாக அடையாளப்படுத்தப்பட்டது.

### ஆய்வின் நோக்கம்

ஆய்வானது காத்தான்குடி பிரதேசத்தில் சனத்தொகை அதிகரித்து வருவதற்கான காரணங்களையும் கண்டறிதலை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### *ஆய்வு முறையியல்*

இவ்வாய்விற்கு முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவு சேகரிக்கும் முறை பயன்படுத்தப்பட்டுள்ளன. இது சமூக விஞ்ஞான ஆய்வாக அமைந்துள்ளமையினால் பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் அளவு சார் , பண்புசார் முறையில் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டடுள்ளன. மேலும் தரவுகள் சேகரிப்பிற்கு பின்வரும் நுட்பமுறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் நிலை தரவு சேகரிப்பு முறையில் தொடர்புபட்ட உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரி, பொது வைத்திய அதிகாரிகள், ஆய்வாளர்கள், பொலிஸ் அதிகாரி மற்றும் தெரிவு செய்யப்பட்ட புத்தி ஜீவிகள் உட்பட 10 நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வாளனுடைய வசதிக்கு ஏற்ப இலக்கக் குழு கலந்துரையாடல் 02 மேற்கொள்ளப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் உட்பட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், வைத்தியர் மற்றும் பொதுமக்கள் சிலரை உள்ளடக்கி அவர்களுடைய பொதுவான அபிப்பிராயங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் பிரதேச மக்களையும், அவர்களது செயற்பாடுகளை அவதானிப்பதன் மூலமும் வினாக் கொத்துக்கள் பயன்படுத்தியும் ஆய்விற்கான தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன.


வினாக்கொத்து மாதிரிகளை தெரிவு செய்யும் முறைகளில் எளிய எழுமாற்று மாதிரி முறையில் திருவுளச்சீட்டு முறைமை பயன்படுத்தப்பட்டுள்ளது. 18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் 5 எழுமாற்று மாதிரிகளை தெரிவு செய்வதன் மூலம் 90 வினாக்கொத்துக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத்தரவு சேகரிப்பு முறையில் காத்தான்குடி பிரதேசத்துடன் தொடர்புடைய ஆவணப்படுத்தப்பட்ட புள்ளி விபரவியல் அறிக்கைள், பிரதேச செயலகத்தினுடைய வருடாந்த அறிக்கைகள், தள வைத்தியசாலையின் அறிக்கை, பொலிஸ் பிரிவினது குற்றவியல் அறிக்கை, நகர சபையினது ஆண்டறிக்கை உட்பட நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுப் பத்திரிகைகள் போன்றன தேவைக்கு ஏற்ப பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வின் பெறுபேறுகள்**

மக்கள் அடர்த்தி மற்றும் மக்கள் வளர்ச்சி தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தின் பல்வேறு தரப்பினர்களும் தமது விமர்சனங்களையும் கருத்துக்களையும் தெரிவிக்கின்றனர். குறித்த காத்தான்குடி பிரதேசமானது 6.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் மொத்தமாக 14176 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர் (பிரதேச செயலக அறிக்கை – 2018). மக்கள் பரம்பல் ஏற்படுவதற்கான காரணங்களையும் அடர்த்தியின் அதிகரிப்பினால் சமூகம் எவ்வாறான விளைவுகளினை எதிர்கொள்கின்றது என்பன தொடர்பாகவும் தெளிவான கருத்துக்கள் தரவுகளின் பகுப்பாய்வுகளில் இருந்து எடுத்துக்காட்டப்படுகின்றன.

**மக்கள் தொகை அதிகரிப்பதற்கான காரணங்கள்**




n=90, (மூலம்: வினாக்கொத்து பகுப்பாய்வு, 2018)

குறித்த பிரதேசமானது ஆரம்ப காலங்களை விட தற்போது எதிர் கொள்கின்ற அபிவிருத்தி அம்சங்கள், மக்கள் தங்களது சமயம் மீது கொண்டுள்ள ஆர்வம், இள வயதில் மேற்கொள்கின்ற திருமண முறைமை, குறித்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் பிரதேசத்தின் மீது கொண்டுள்ள பற்று மற்றும் குடியேற்றங்கள் மூலமாக ஏற்பட்ட சமூக அமைப்பு போன்ற காரணங்களுடன் இணைத்து ஏனைய பல காரணங்களும் காத்தான்குடியில் மக்கள் அடர்த்தி ஏற்படுவதற்கான பிரதான காரணங்களாக அமைந்துள்ளன என்பதனை மக்களிடம் இருந்து பெறப்பட்ட வினாக்கொத்துகளின் அடிப்படையில் எடுத்துக்காட்ட முடியும்.

**பிரதேசம் மீதான பற்று**

காத்தான்குடி பிரதேசத்தில் சனத்தொகை அடர்த்தி ஏற்படுவதற்கான காரணங்களுள் மிகப் பிரதான காரணமாக அமைவது பிரதேசம் மீதான மக்களின் விருப்பு அல்லது பற்று என்று வினாக்கொத்து பகுப்பாய்வின்படி, 35% காரணங்கள் இவற்றினை உறுதி செய்கின்றன. காத்தான்குடி பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற மக்கள் தன் பிரதேசத்தின் மீது கொண்டுள்ள அதீத ஈடுபாடும், எனது என்பதை விட எமது ஊர் என்ற ஈடுபாடு கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். பிறப்பிலிருந்தும், பரம்பரை பரம்பரையாகவும் வாழ்ந்து வருகின்ற மக்கள் எவ்வித காரணத்தினாலும் குறித்த பிரதேசத்தினை விட்டு விலகிச் செல்ல மனதால் கூட எண்ணாத நிலைமையே காணப்படுகின்றது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலின் போது,

> “ கடந்த காலத்தில் ஏற்பட்ட சுனாமி பேரலையின் பிற்பாடு மக்களுக்கு ஓர் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது. அதன் போது பாதுகாப்பின் நிமித்தம் மக்களை தற்காலிகமாக குறித்த பிரதேசத்தினை விட்டு நீங்கி தங்களது உறவுகள் வெளியிடங்களில் காணப்படின் அங்கு சென்று அனர்த்த எச்சரிக்கை முடிவடைந்த பின்னர் மீண்டும் தங்களது வீடுகளில் வந்து குடியேறுமாறு பல்வேறு தரப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளால் பணிந்துரைக்கப்பட்டது. இதற்கு மக்கள், எது நடந்தாலும் பரவாயில்லை, எங்களுடைய உயிர் பிர்ந்தாலும் பரவாயில்லை, எங்களது சொந்த ஊரிலேயே போகட்டும். நாங்கள் பிறந்த இடத்தில் தான் எங்களை அடக்கம் செய்ய வேண்டும். எங்களது ஒட்டுமொத்த உறவுகளும் இங்குதான் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர் ” என மிகத் தெளிவாக கூறுகின்றனர்.

(இலக்கக் குழு கலந்துரையாடல்)

இவர்களது கருத்துக்களினை வைத்துப்பார்க்கும் போது அனர்த்த எச்சரிக்கை முன்வைக்கப்பட்டதும் தங்களை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தினை விட தங்களது பிரதேசத்தினை விட்டு எவ்வாறு செல்வது? என்ற கேள்வியுணர்வே காணப்பட்டது. நேர்காணலில் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில்,

> “காத்தான்குடி பிரதேச வாழ் மக்கள் தங்களுடைய பிரிவுகளை கூட விட்டுக் கொடுக்க விரும்ப மாட்டார்கள். பாடசாலை, பிரத்தியோக வகுப்புக்கள், திருமண முறைமைகள் உட்பட அனைத்து விடயங்களிலும் குறித்த பகுதியினர் என்ற உணர்வுடனே இம்மக்கள் காணப்படுவர். அதிலும் குறிப்பாக பழைய காத்தான்குடியில் வசிப்பவர்கள் தாங்கள் பூர்வீகக் குடிகள் என்றும், நடைமுறையில் அதிகமானவர்கள் வசதி படைத்தவர்களாகவும் காணப்படுகின்றனர். எவ்வாறாயினும் தமது பிரதேசத்திற்கு ஏதேனும் ஆபத்து மற்றும் பிரச்சினைகள் எழும் போதும் அபாயம் ஏற்படும் என அஞ்சும் போதும் அனைவரும் எமது ஊர், இதனை பாதுகாப்பது எமது கடமை, ஒரு போதும் எமக்கு என்ன நேர்ந்தாலும் எம்மண்ணிற்கு எதுவும் இடம்பெறக் கூடாது என்று எதற்கும் துணியும் தைரியத்தை காணக்கூயடிதாக உள்ளது” என்று கூறினார்.

(நேர்காணல்-03)

இக்கருத்தினை அவதானிக்கும் போது ஒரு பிரிவு மக்கள் மற்றொரு பிரிவிற்கு செல்வதனையே விரும்பாத போது குறித்த பிரதேசத்தினை விட்டு ஒரு போதும் நகரவோ வேறு இடங்களிற்கு சென்று வாழவோ விரும்பமாட்டார்கள். வசிப்பதற்கு சிறு இடம் என்றாலும் தங்களுடைய பிரதேசத்தில் வாழ்ந்தால் போதும் என்று மக்கள் நினைக்கும் அளவில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு காரணம் ஆரம்பத்தில் வாழ்ந்த மக்களினை விட தற்போது உள்ள சமூகமானது பிரதேச ரீதியாக சிறந்த பற்றுடன் காணப்படுகின்றனர் என்பதனை எடுத்துக்காட்டுகின்றது.

**இளவயது திருமணம்**

சமூகத்திற்கு சமூகம் எவ்வயதில் திருமணம் செய்கின்றனர் என்பதை அடிப்படையாகக் கொண்டு வேறுபடுகின்றது. காத்தான்குடி பிரதேசமானது தனியான இஸ்லாமியர்களை கொண்டு காணப்படுவதனால் அவர்கள் மத்தியில் திருமணம் என்பது அவரவர் விருப்பினை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது எனலாம். பருவ வயதை அடைந்த ஆணோ பெண்ணோ உடலியல் மற்றும் உள்ளார்ந்த அம்சங்களினூடாக தாங்கள் திருமணம் செய்ய தகுதியானவர்கள் என்று கருதும் பட்சத்தில் திருமணம் செய்து கொள்ள முடியும். மாறாக வேறு எவ்வித சட்ட முறைகளும் கடைப்பிடிக்கப்படுவதில்லை. ஆக காத்தான்குடியினை பொறுத்தவரையில் ஆண்களும், பெண்களும் இளவயதில் திருமணம் செய்யும் வழக்காறு காணப்படுகின்றது.

வினாக்கொத்தின் பகுப்பாய்வின்படி, மக்கள் அடர்த்தி ஏற்படுவதற்கான காரணங்களில் 25% கருத்துக்களாவது இளவயதில் திருமணம் செய்யும் முறைமை எடுத்துக்காட்டப்படுகின்றது. இப்பிரதேசத்தில் பெண்பிள்ளைகளுக்கு அதிகமாக 20, 21 வயதிற்கு முற்பாடே திருமணம் முடித்து வைப்பர். ஆண்கள் அதிகளவு 25, 26 வயதிற்குள் திருமணம் முடிக்கும் முறைமையே மரபாக காணப்படுகின்றது.

க.பொ.த சாதாரணதரம் பரீட்சை எழுதியதன் பிற்பாடு பரீட்சை பெறுபேறுகள் வரும் முன்பே திருமணம் செய்து வைக்கின்றனர். பரீட்சையில் சித்தியடைந்த பெண்பிள்ளைகளைக் கூட க.பொ.த உயர்தரம் கற்க வைக்காமல் திருமணம் செய்து வைக்கும் நிலைமை காணப்படுகின்றது. இது தவிர உயர்தர பிரிவில் கல்வி கற்கும் பெண்பிள்ளைகளைக் கூட கல்வியை இடைநிறுத்தியும் திருமணம் செய்து வைக்கின்றனர். இவ்வாறான திருமணங்கள் குடும்ப நிலைமை மற்றும் வசதிவாய்ப்பு என்பவற்றினை கவனத்திற்கொண்டு இடம்பெறுகின்றன. ஆனால் இளவயதில் செய்து வைக்கும் திருமணமுறைமையினால் சனத்தொகை அதிகரிப்பும், பிள்ளைப்பேறு விகிதமும் அதிகரிக்கின்றது என்பதனை காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரியின் நேர்காணலில் போது அறிந்து கொள்ள முடிந்தது.

**காத்தான்குடியில் நடைபெற்ற திருமணம் தொடர்பான விபரம்**

| **வருடம்** | **எண்ணிக்கை** |
|---|---|
| 2014 | 349 |
| 2015 | 383 |
| 2016 | 440 |
| 2017 | 423 |

மூலம்: திட்டமிடல் பிரிவு, காத்தான்குடி பிரதேச செயலகம் - 2017

இவற்றினை அவதானிக்கும் போது ஒவ்வொரு வருடமும் 350 மேற்பட்ட திருமணங்கள் காத்தான்குடியில் இடம்பெறுகின்றன. இதனால் ஒவ்வொரு வருடமும் புதிதாக வீடுகளும், குடும்பங்களும் திருமணம் நடைபெறுவதற்கு சமமான அளவில் கட்டப்படுகின்றது. இத்திருமணமுறையின் மூலமாக சில பெண்பிள்ளைகள் 15 வயதிலே திருமணமுடித்து வைத்தும், அவர்கள் அதே வருடமே பிள்ளைப்பேற்றிற்கு வைத்தியசாலை செல்லும் நிலைமையும் காணக்கூடியதாக உள்ளது. மேலும் நேர்காணலின் போது பொதுச்சுகாதார வைத்திய அதிகாரி கருத்து தெரிவிக்கையில்,

> " காத்தான்குடியை பொறுத்தவரையில் எந்தவொரு பிரதேசத்திலும் அமையாத புதுவித முறைமை உள்ளது. சிறுவயதிலேயே உடல், உள நிலையை கவனத்திற கொள்ளாது திருமணம் முடித்து வைப்பதும் குறித்த பெண்கள் அவசரப்பட்டு பிள்ளை பெற்றுக் கொள்வதும் பாரியதொரு விடயமாக உள்ளது. இதனால் அவர்களது உடல் பலவீனம் அடையவும் மற்றும் குறித்த வயதை அடையும் முன்பே முதுகு, இடுப்பு வலிகள் ஏற்படுகின்றன. அடுத்த பிள்ளையை திட்டமிடாமல் ஒரு வருடம் அல்லது 2 வருடத்திற்குள் கர்ப்பமாகின்றனர் " என்று கூறுகிறார்.
>
> (நேர்காணல்-09)

இவ்வாறான நடவடிக்கைகளினை வைத்துப் பார்க்கையில் தொடர்ந்தும் சனத்தொகை வளர்ச்சி ஏற்பட ஏதுவான காரணிகளாக இளவயது திருமண முறையினை குறிப்பிட முடியும்.

**அபிவிருத்தி ரீதியான காரணங்கள்**

இலங்கையின் அபிவிருத்தி அடைந்து வருகின்ற பிரதேசங்களில் பிரதானமான ஒன்றாக காத்தான்குடி அமையப் பெற்றுள்ளது. வினாக்கொத்து பகுப்பாய்வின்படி, சனத்தொகை அதிகரிப்பிற்கான காரணங்களுள் 17% காரணமாக அபிவிருத்தியினை மக்கள் குறிப்பிடுகின்றனர். இப்பிரதேசத்தில் ஆரம்ப காலகட்டங்களில் இல்லாத மக்கள் அடர்த்தியானது திடீரென 20 – 25 வருட காலங்களில் அதிகரித்து வருகின்றதெனில் அதற்கு பிரதேசம் தற்போது கொண்டுள்ள பௌதீக, சுகாதார, கல்வி, மருத்துவம் மற்றும் பொருளாதார ரீதியான அபிவிருத்திகளின் பங்களிப்பு காத்திரமானது.

பொருளாதார ரீதியாக பலமாற்றங்கள் கைத்தொழில் முறைமை, வியாபாரம், வர்த்தக நடவடிக்கைகள் என்றும் சுயதொழில் முயற்ச்சியான்மைகளும் அதிகமாக வளர்ச்சியடைந்துள்ளன. அதுமட்டுமன்றி காத்தான்குடியில் இதனால் வர்த்தகம் மற்றும் வியாபாரம் செய்பவர்கள் தொடர்ந்து தங்களது தொழிலில் வளர்ச்சியினை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இப்பிரதேச மக்கள் மென்மேலும் பிரதேசத்திலேயே தங்கி காணப்படுவார்களே தவிர வேறொரு இடத்தில் சென்று வாழ்வாதாரத்தினை மேற்கொள்ள எண்ணமாட்டார்கள்.

காத்தான்குடி பிரதேசத்தினை பொறுத்தவரை மக்களின் சுகாதார நடவடிக்கைகளில் மிகவும் கரிசனை காட்டப்பட்டுள்ளது. 10 சுகாதார மருத்துவ பிரிவுகளில் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறித்த பிரதேசம் மிகவும் சுத்தமாகவும் மக்கள் விரும்பத்திற்கு ஏற்ற வகையிலும் அமையப்பெற்றுள்ளன. மேலும் மகப்பேற்று, ஏனைய நோய்கள், சுகயீனம் தொடர்பாகவும் நோய்த் தொற்று ஏற்படும் போது அதிலிருந்து மக்களை பாதுகாக்கவும் பல உத்திகள் கையாளப்பட்டுகின்றன. இதனால் மக்களுக்கு பிள்ளைகள் பெறுவதிலும், வளர்ப்பதிலும் தயக்கமும் பயமும் எதுவுமில்லை.

**காத்தான்குடி பிறப்பு, இறப்புகளின் எண்ணிக்கை**

| **வருடம்** | **பிறப்பு** | **இறப்பு** |
|---|---|---|
| 2006 | 177 | 154 |
| 2009 | 744 | 198 |
| 2014 | 33 | 158 |
| 2017 | 752 | 154 |

மூலம்: காத்தான்குடி பிரதேச செயலகம், 2017

இவற்றினை அவதானிக்கும் போது காத்தான்குடியில் குறிப்பிட்ட சில வருடங்களை ஒப்பிட்டு நோக்கும் போது மக்களின் இறப்புகளின் எண்ணிக்கையினை விட பிறப்புகளின் எண்ணிக்கையானது அதிகமாக காணப்படுகின்றது. மக்களின் பிறப்பு வீதம் அதிகரிப்பதும் இறப்பு விகிதம் குறைவடைவதும் சமூகத்திற்கு பெரிதும் வளர்ச்சியை எடுத்துக்காட்டும் செயற்பாடாகும். இதனால் மக்களின் சுகாதாரம் சார் விடயங்களானது அவர்களுக்கு சார்பாக அமைவதால் மக்கள் தொகை வளர்ச்சிக்கும் அடர்த்திக்கும் பாரிய பங்கினை ஆற்றுகின்றது எனக் கூறலாம்.

**குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டமை**

காத்தான்குடி சனத்தொகை மதிப்பீட்டு அறிக்கைப்படி, இருபத்திரண்டு ஆயிரம் அண்ணலவான மக்கள் தொகையினரே பூர்வீகமாக காணப்பட்டனர். தொடர்ந்து 1988, 1989, 1990 களில் ஏற்பட்ட யுத்தத்தின் விளைவாக மக்கள் தங்களது உயிரிற்கு பயந்து கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள 22 கிராமங்களில் இருந்து காத்தான்குடிக்கு குடியேறி தங்களது குடியமைப்புக்களினை அமைத்துக் கொண்டனர். இதன் போது 1990- 1995 வரையான ஆண்டுகளில் இருபத்திரண்டாயிரமாக காணப்பட்ட மக்கள் தொகையானது முப்பதாயிரத்திற்கு மேற்பட்டதாக அதிகரித்தது.

தொடர்ந்து காத்தான்குடியின் மக்கள் வாழ்ந்து வந்த எல்லையை தாண்டி, காடுகளாகவும், இயற்கையாகவும் காணப்பட்ட பகுதிகளில் குடியமைப்பு உருவாக்கப்பட்டு தங்களது தேவையின்படி, நிலங்களும் சொந்தமாக்கப்பட்டது. ஒல்லிக்குளம், கீச்சாம்பழம், சிகரம், பூநொச்சிமுனை, பாலமுனை, காவத்தமுனை, மூதூர், உன்னிச்சை, உருகாமம் மற்றும் காங்கேயனோடை போன்ற பகுதிகளில் வாழ்ந்த முஸ்லிம்களே குடியேறினர்.

**குடியேற்ற மக்களின் எண்ணிக்கையால் சனத்தொகை முறையில் ஏற்பட்ட மாற்றங்கள்**

| ஆண்டு | சனத்தொகையின் எண்ணிக்கை |
|---|---|
| 1981 | 22210 |
| 1990 | 32525 |
| 1991 | 33332 |
| 1994 | 31446 |
| 1995 | 32058 |

மூலம் : திட்டமிடல் பிரிவு, காத்தான்குடி பிரதேச செயலகம்- 2015

மேற்காட்டப்பட்ட அட்டவணையை அவதானிக்கும் போதே இலகுவாக மக்கள் வளர்ச்சி எவ்வாறு ஏற்பட்டிருக்கும் என அறியமுடியுமாக உள்ளது. காத்தான்குடியின் பூர்வீகமான மக்கள் தொகையினர் வாழந்து வந்ததை விட புதிதாக குடியேறியவர்களே அடர்த்தி ஏற்பட பிரதாக காரணமாக அமைந்துள்ளனர் என கூறலாம். மேலும் தற்காலிக குடியேற்றங்களை அமைத்துக் கொண்டவர்கள் காலப்போக்கில் நிரந்தரமாக வாழப்பழகிக் கொண்டனர். இவர்கள் காத்தான்குடி தனியான முஸ்லிம் சமூகத்தினை கொண்டமைந்தமையினால் தங்களுக்கு எதுவித ஆபத்தும் உயிர் சேதமும் ஏற்படாது எனும் நோக்கிலே வந்தனர் என்றும், குடியேற வந்தவர்கள் முஸ்லிம்கள் என்றதன் அடிப்படையிலும் அவர்களது உயிர்களை காப்பாற்றுவது ஒவ்வொரு முஸ்லிம்களின் கடமை என்றதன் அடிப்படையிலுமே தங்களது பகுதியில் தங்குவதற்கு காத்தான்குடி பிரதேச மக்கள் விருப்பு தெரிவித்தனர். தற்போதைய காலத்தினை பொறுத்தவரையில் அவர்களது சொந்த இடங்களிற்கு குடியமர்த்த பல்வேறு அபிவிருத்தி திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அவர்கள் சமூக அசைவினை ஏற்படுத்த தயார் இல்லாத நிலைமையும் காத்தான்குடியில் மக்கள் அடர்த்தி எற்பட காரணமாகின்றது.

**இருப்பிட அல்லது நிலப்பற்றாக்குறை**

நிலம் அல்லது இடவசதி என்பது குறிப்பட்ட அனைத்து பகுதிகளிலும் பேசுபொருளாக காணப்படுகின்றது. இருப்பினும் காத்தான்குடியில் நிலவசதி இன்மையும் கட்டடங்களின் அதிகரிப்பும், மக்கள் தொகை வளர்ச்சி ஆகியன அனைத்தும் ஒன்றிணைந்தும் அடர்த்தியை ஏற்படுத்தும் கருவிகளாக மாறியுள்ளன என்று குறிப்பிடலாம். நில வசதி என்பது ஒவ்வொரு இடம், பிரதேசத்தினை பொறுத்து அளவுகளில் வேறுபடுகின்றது. காத்தான்குடியை பொருத்தவரையில் நிலம் போதாது என்று கூறுவதை விட அப்பிரதேசத்தில் மக்கள் வாழ்வதற்கு ஏற்ப நிலம் பற்றாக்குறையாக உள்ளது எனலாம்.

6.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் மொத்தமாக 47125 மக்கள் தொகையினர் வாழ்கின்றனர். பனினெட்டாயிரத்திற்கு மேற்பட்ட கட்டடங்களும், பதினொன்காயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்களிலும் மக்கள் வாழ்கின்றனர். இது தவிர ஐயாயிரத்திற்கு மேற்பட்ட வரத்தக மையங்களும், 22 பாடசாலை மற்றும் ஏனைய தனியார் நிறுவனங்கள், மைதானங்கள் உள்ளடங்களாக அரச கட்டடங்கள் என்று பல ஆயிரக்கணக்கான கட்டடங்கள் அமைந்துள்ளன. மக்களின் தொகை வளர்சியும் கட்டட, அமைவிடங்களின் அதிகரிப்பும் பௌதீக, உட்கட்டமைப்பு ரீதியாக நெருக்கத்தினை ஏற்படுத்துகின்றது. பொதுவாக மக்கள் அடர்த்தியான பிரதேசம் அடர்த்தி அற்ற பிரதேசம் என்ற எண்ணக்கருவினை எடுத்துக்காட்டுவது நிலப்பரப்புதான். காத்தான்குடி என்ற பிரதேசத்தின் நிலப்பரப்பானது 6.5 சதுர கிலோ மீற்றர் ஆகும். ஆனால் அதில் வாழ்கின்ற மக்களின் தொகை அதிகரித்தமையினாலேயே இப்பிரதேசம் அடர்த்தி கூடிய பிரதேசமாக கருதப்படுகின்றதே தவிர வேறு எதுவுமில்லை. நிலப்பரப்பு மக்கள் வாழ்வதற்கு போதுமானதாக அல்லது பற்றாக்குறையாக உள்ளமையானது அடர்தியான சூழல் உருவாக பிரதான காரணியாகின்றது எனலாம்.

இது தவிர ஏனைய காரணமாக தற்போதைய அரசியல் அபிவிருத்தியினால் காத்தான்குடி பிரதேசமானது வெளிநாடுகளைப் போன்று காட்சியளிப்பது மக்கள் மனதில் ஆழமாக பதிவாகியுள்ளது. இதன்போது வெளியிடங்களில் குடியேர விரும்புபவர்கள் கூட தாங்கள் எங்களுடைய ஊரிலேயே இருந்து விடுகிறோம் என்ற மனநிலையை அமைத்துக் கொள்கின்றனர். இது தொடர்பான நேர்காணலின் போது,

> “ முற்பட்ட காலங்களில் காணப்பட்டதை விட தற்போது காத்தான்குடி பௌதீக ரீதியாக கவர்ச்சியாக காணப்படுவது மக்களை இவ்வூரிலே தங்கி இருக்க வைக்கிறது. மேலும் வெளியிடங்களைச் சேர்ந்த மக்களும் காத்தான்குடியில் வந்து குடியேறியுள்ளனர். இருப்பினும் அவர்கள் சனத்தொகை கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. எவ்வாறிருப்பினும் சனத்தொகை அடர்த்தி ஏற்பட பல்வேறு காரணிகள் ஏதுவாக அமைகின்றன ” என கூறினார்.

(நேர்காணல்-05)

அதுமட்டுமன்றி பிரதேச மக்களிடையே காணப்படும் காத்தான்குடி தொடர்பான நற்பெயர்களானது குறித்த பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களின் ஆழ்மனதில்

பதியப்பட்டுள்ளமையினாலும் பிற பிரதேச மக்களை கவர்ந்து குடியேற வைத்தமையினாலும் மக்களின் அடர்த்தி இருப்பதை விட மேலும் அதிகரிக்க காரணமாகவும் உள்ளது எனலாம்.

ஆகவேதான் காத்தான்குடி பிரதேசத்தினை பொறுத்தவரையில் சனத்தொகை அடர்த்தி ஏற்பட மேற்கூறப்பட்ட காரணங்கள் ஏதுவாக அமைகின்ற போதிலும் பௌதீக, சமூக, பொருளாதார ரீதியான காரணங்களும் பிரதானமானதாக அமைந்துள்ளன. சமூகத்தில் காணப்படும் மாற்றங்கள், முன்னேற்றங்கள், அபிவிருத்தி செயற்பாடுகளின் மூலமாகவும் தொடர்ந்து சமூகத்தில் சனத்தொகை அடர்த்தி ஏற்படுகின்றது எனலாம். இது தவிர ஆரம்ப கால முறைமையில் அதிலும் சனத்தொகை மதிப்பீடு செய்யப்பட்ட காலங்களில் இருந்து மக்கள்தொகையை அவதானித்தால் அது மிகக் குறைவாகவே காணப்பட்டது. பின்பு சமூகத்தில் ஏற்பட்ட பல்வேறு துறைகளின் வளர்ச்சியும் , குடியேற்றங்களும் சனத்தொகை வளர்ச்சி இடம்பெற காரணமாக அமைந்துள்ளன என நேர்காணல், இலக்கக் குழு கலந்துரையாடல் மற்றும் வினாக்கொத்து பகுப்பாய்வுகளின் இறுதிப் பெறுபேறுகளாக பெறப்பட்டுள்ளன.

**முடிவுரையும் பரிந்துரையும்**

மக்கள் வளர்ச்சி என்பது இன்றைய காலகட்டத்தினை பொறுத்தமட்டில் ஒரு பிரதேசத்திலோ நாட்டிலோ இடம்பெறுகின்றது எனின் அதற்கு காரணம் அங்கு காணப்படும் மரணவீதத்தின் குறைவு பிறப்பு வீதத்தின் அதிகரிப்புமே ஆகும். ஆக இவ்விரண்டு நிலைமைகளுமே சிறந்த சுகாதார வளர்ச்சியின் எடுத்துக்காட்டாகும். இது ஆரோக்கியமான செயற்பாட்டின் பிரதியீடாக அமையப் பெற்றுள்ளன. காத்தான்குடியினை பொறுத்தவரையில் மக்கள் பெருகிக் கொண்டு செல்வதானது இங்கு சவாலாகவோ பேசு பொருளாகவோ அமையவில்லை. இருப்பினும் குறித்த பகுதியை விட்டு விலகிக் கொள்ள முடியாத மனநிலையில் மக்கள் அனுசரித்து வாழ பழகிக்கொண்டுள்ளனர் என கூறலாம்.

இப்பிரச்சினையை குறைப்பதில் பிரதியீட்டு நிலங்களை (Alternative land ) அரசு வழங்கல் அவசியமாகின்றது. மக்கள் தற்காலத்தினை விட எதிர்வரும் காலங்களில் பாரிய அனர்த்தத்தினை எதிர்நோக்க நேரிடும் போது அரசினது கடமை ஒவ்வொரு குடிமகனையும் பாதுகாப்பதாகும். அரசு முன்னெடுக்கப்படும் பல்லாயிரக்கணக்கான அபிவிருத்தி திட்டங்கள் காணப்படுகின்றன. அவற்றில் காத்தான்குடியினை நோக்கி தொடர்மாடி வீட்டுத்திட்ட முறைமைகளை அறிமுகம் செய்தல் பொறுத்தமானது. நிலப்பரப்பு குறைவாக காணப்படுகின்றமையினால் இது போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் மிகச்சரியான தீர்வினை எதிர்காலத்திலும் பெறலாம்.

காத்தான்குடிக்கு மிகப் பொறுத்தமான நகரத்திட்டமிடல் முன்னெடுக்கப்படல் வேண்டும். இந்நகரத் திட்டமிடலினை அறிமுகப்படுத்தும் போது ஏனைய அரசு மற்றும் அரச ஊழியர்கள் மறுக்காமல் ஆதரவு அளித்து முறையாக மேற்கொள்ளப்படுவதன் மூலம் எதிர்காலத்தில் இடம்பெறும் சனத்தொகை அடர்த்தி மற்றும் நெருக்கடி முறைகளை திட்டமிட்டபடி கையாள முடியும். மக்கள் வளர்ச்சி ஏற்படும் போது சமூகத்தில் நிலையான வாழ்வினை மேற்கொள்வதற்கான சவால்களும் அதிகரிக்கக் கூடும். இதன்போது சமூக அசைவினை (social mobilization) மேற்கொள்வது பொருத்தமானதாக அமையும். மக்கள்

இடம்பெயர்வு, குடியேற்றம் என்று உருவாகும் போது காத்தான்குடியினை பொறுத்தவரையில் அனைத்து வசதிகளும் கிடைக்கின்றமையினால் இதற்கு சமமான அளவு குடியேற்றம் மேற்கொள்ளும்போதும் பிரதேசத்தில் அமைத்துக் கொடுக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்கின்ற போதுதான் மக்களின் பங்களிப்பும் அங்கு பேசுபொருளாக அமையும். ஆக குறித்த பல்வேறு நடவடிக்கைகளை அரசு இவ்வாய்வுப் பிரதேசத்தில் முன்னெடுக்க வேண்டுமாயின் மக்களின் ஆதரவும் பாரிய அளவில் பங்களிப்பு செலுத்த வேண்டிய தேவைப்பாடும் காணப்படுகின்றது எனலாம்.

**உசாத்துணைகள்**


Klasen Stephan & Nestmann Thorsten. (2004). *Population, Population Density and Technological Change*. Cesifo Working Paper Series.

Hancock John & Bout Alan. (2001). *World Population Density*. G.C.S.F. Geography revise study guide.

(2014 – 2017). Resource Profile. Planning Division. Kattankudy Divisional Secretariat.

(2006). U.S. census International data base. Retrieved from http;//timssandpirls.bc.ed>pirls2006/user-guide.html.

(2006). world population datasheet. Retrieved from http;//assets.prb.org>pdf06>06worlddatasheet.pdf.

Med India–calculator world population clock. Retrieved from http;//geography.about.com/ode/lists/2050 pop.html.

(2014). U.N.report. Retrieved from http;//unstats.un.org/unsd/demographic-social/census programme. Html.

(2012, 2014 & 2015). Census report. Department of census and statistics Sri Lanka. Retrieved from http//city population infor/php./Srilanka-admin.php?adm21d-5124.

(2011&2015). Planning division. D.S. office Kattankudy. Retrieved from http://www.kattankudy.ds.gove.lk/index.php?option=comcontent&view=article &id4&itemid=63&lang=en.

(1500–2000). World Population Growth. Retrieved from http;//www.tribunindia.com/2005/special/tribune-125/population–JPG.

U.N. population Division. World Urbanization Prospects: The 2001 revision. 2002. Newyork, U.N.p.182. Retrieved from: http://info.k4health.org/pr/m16/m16chapt1-1.shtml,accessed on 13.04.2015.

(2017). Department of Census and Statistics. Retrieved from www.statistics.gov.lk>education>school census Report-2017-pdf.

வருடாந்த அறிக்கை. (2014 – 2018). சிறுவர் மற்றும் பெண்கள் குற்றப் பிரிவு. பொலிஸ் நிலையம். காத்தான்குடி.

**நேர்காணல்:**

Farook Sibly(1) . Engineer & Former Member of Provincial Council Eastern Province.

Maheer,(2) S.D.M. (BVsc.) MSc in Epidemiology, Director of - RISE & Founder of Society for Research and Development.

Ibraheem(3), M. Collamist of News Paper. Kattankudy.

Jabir(4), M.S.M. Medical Superintendent & M.B.B.S. (SL). Kattankudy Base Hospital.

Nawas Mohamed(5). Working Director of SLRC, Country Director of Sri Lanka and Maldives, Search for Common Ground Chairman of the Board of directors-RISE.

Ratnayaka (6), R.M.S. Motor Traffic officer. Kattankudy Police Division.

Asfar(7), M.S.H. Chairman of Kattankudy Urban Council.

Ramees(8), M.H.M. (B.A). Secretary of Federation of Kattankudy Mosques and Muslim Institutute. Kattankudy.

Rahmathullah(9), M.M. (P.H.I). Medical Health Office. Kattankudy.

Lebbe Umar(10), A.L. Quazi & Grama Nilathari. Kattankudy.